யைவழிபட்டால் விரும்பிய எல்லாப் பேறுகளும் அடையலாம் என்று உபதேசஞ் செய்தார் காசிபர். அடுத்துமார்க்கண்டேயருடைய ஒப்புயர்வில்லாத தவத்தின் பெருமைகளை யெல்லாம் எடுத்துக் கூறினார். தவத்தினால் யமனையும் வெல்லலாம் என்ற சிறப்புக் காட்டப்பட்டது. தமது மக்களையும் மார்க்கண்டேயரைப்போல அருந்தவம் செய்து நிரந்தர வாழ்வு பெற்று அமைய வேண்டுமென ஆசீர்வதித்தார். ஆனால் தவமும் கைகூடுவது தவம் உடையாருக்கே அன்றி மற்றையோருக்கு இல்லை. ''ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும்'' என்ற குறட்பாவுக்கு இயைய பெருமை பெற்றவர்கள் பல முனிவர்கள். ''கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு'' என்பதற்கியைய மார்க்கண்டேயர் காலனை வென்றதும் எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் மாயை இந்த அறிவுரைகளைத் தடுத்து உலகியல் வாழ்வைத் தன் சிறுவர்களுக்கு உணர்த்தி நிற்கின்றாள். மாயையின் உபதேசமும் சுக்கிராச்சாரியாருடைய உபதேசமும் சூரபன்மன் ஆதியோருக்கு ஊக்கத்தைக்கொடுத்தது. தேவர்களை வெல்ல வேண்டும், சிறைப் படுத்தவேண்டும், ஏவல் கொள்ள வேண்டும் என்ற உபதேசமும் அவுணர்களுக்கு ஊட்டப்பட்டது. குற்றங்களை நீக்கவேண்டியவர் குரு. ஆனால் குற்றங்களைச் செய்யும் படியாகத் தூண்டி விட்டிருக்கின்றார் இந்தக் குரு. இதனாலேயே சூரபன்மன் ஆதியோர் அழிவுப்பாதையிற் தள்ளப்பட்டனர்.

**அசுரநாட்டின் நிலை:**

சூரனை எதிர்த்துப் போரிடுவதற்கு முன்பு அவனுடைய மனக்கருத்தை அறிவதற்காக வீரவாகு தேவரை அறுமுகப் பெருமான் தூதாக அனுப்புகின்றார். வீர மகேந்திரபுரிக்குத் தூதாகச் செல்லுகின்றார் தேவர். சென்றவர் சூரன் அரசிருக்கும் வீரமகேந்திர நாட்டைத் தன் கண்களாற் காண்கின்றார். கச்சியப்பசிவாச்சாரியார் இந்தக் காட்சியை வெகு அழகாகச் சித்திரிக்கின்றார்.

நாடி மேலெழுத் தசையிலா துலறியே நரையாய்க்
கோடு பற்றிமூத் தசைந்திடு வோரையுங் கூற்றால்
வீடு வோரையும் பிணியுழப் போரையும் மிடியால்
வாடு வோரையுங் கண்டிலம் இதுதவ வலியே

